**மெததும்பர பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

--------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 06 திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மெததும்பர பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டுனுள் பல்வேறு ஒதுக்கீட்டின் மீது கட்டிட அபிவிருத்திக்காக 16 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10,360,591 ஆன செலவு மூலதனமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நீர் களஞ்சிய இருப்பில் உள்ள ரூபா 366,000 பெறுமதியான 122 நீர் மாணிகள் மற்றும் ரூபா 389,620 பெறுமதியான நீர் உபகரணங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 255,663 பெறுமதியான உள்ளக தொலைபேசி தொகுதி மூலதனமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 எதிர்பாறாத பொறுப்பு

சபைனால் 252-6479 இலக்கம் கொண்ட கெப் வண்டியின் எக்ஸ்கீசி கட்டளை விடுவித்துக்கொள்வதற்காக வெளி தரப்பினர் ஒருவருக்கு எதிராக சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மற்றும் உத்தேச பொருளாதார மத்திய நிலையத்தின் கடையறைகளை குத்தகைக்கு வழங்குதல், பாதைகள் வெட்டுதல், அனுமதியற்ற நிர்மானம், வீதவரி கட்டணம் செலுத்துதல் மற்றும் அடிப்படை உரிமைகள் மீறல் போன்ற விடயங்கள் தொடர்பாக முரையே சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட 26 வழக்குகள் மற்றும் 16 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டுதிசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய 2 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதிரூபா 18,011,397 ஆனது.அது தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 1-5 இடையிலான வருடகாலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,166,779 மற்றும் 5 வருட காலத்தை விஞ்சி தீர்க்கப்படாத மீதிகளின் பெறுமதி ரூபா 531,240 ஆனது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2016 திசெம்பர் 31 திகதிக்கு செலுத்த வேண்டிய 3 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 31,318,769 ஆனது. அது தொடர்பான காலப்பகுப்பாய்வின் போது 1-5 வருடக்

காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 16,801,356ஆனதுடன், 5 வருட காலத்தை விஞ்சி தீர்க்கப்படாத மீதிகளின் பெறுமதி ரூபா 2,108,103 ஆனது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கூட்டுத்தொகை ரூபா 24,428,306 ஆன கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு தொடர்ப்பு | | | இணங்காமை |
|---|---|---|---|---|
| | ----------------------------------------------------- | | | --------------------- |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 149 பிரிவு | | | சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 6 ஹோடல்களிலிருந்து 1 சதவீத வாடகை பணம் பெறப்படும் போது சுற்றுலா சபைக்கு சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொள்ளாது முகாமையாளரினால் வழங்கப்பட்ட வருமான அறிக்கையொன்று அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்தது. |
| | | | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>----------------------------------------------------- | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 571(2)(ஆ) | | 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,744,450 பெறுமதியான 108 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | நிதிப்பிரமாணம் 762 | | தேவைகள் இனங்காணப்படாமல் ரூபா 970,200 பெறுமதியான பீவீசீ பட, சொகட் மற்றும் வேல் உள்ளிட்ட நீர் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கலஞ்சியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| (இ) | 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 மற்றும் 2016 மார்ச் 17 திகதிய இலக்கம் 2016/03 கொண்ட உள்ளூராட்சி ஆணையாளரின்சுற்றறிக்கை | | | கடையறைகளை உப குத்தகைக்கு வழங்குவது பூரணமாக தடை செய்யப்பட்டிருந்த போதும், குத்தகைகாரர்களினால் உப குத்தகை வழங்கள் செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 20,327,811 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 20,579,546 ஆனமையால் முன்னைய வருடத்திற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 251,735 ஆன குறைவொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

நிதி விளைவுகளில் ரூபா 251,735 ஆன குறைவிற்கு ஏனைய வருமானம், மூலதன சொத்துக்கள் பழுதுபார்தல் மற்றும் பராமரித்தலுக்கான செலவினம் அதிகரித்தலும், வாடகை மற்றும் சேவைக்கான கட்டண வருமானம் குறைதலும் பிரதானமாக தாக்கம் விளைவித்திருந்தது.

**2.3 செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் மொத்த நடைமுறை சொத்துக்கள் மற்றும் மொத்த நடைமுறை பொறுப்புக்களிற்கு இடையில் விகிதம் முறையே 2.2 : 1 மற்றும் 1.7 : 1 ஆனது.

**2.4 வருமான நிருவாகம்**

**2.4.1 வீதவரி**

(அ) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 2,410,910ஆன நிலுவை மீதி இருந்த போதிலும் வருடத்தினுள் ரூபா 559,016மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 23 சதவீத அளவானது.

**(ஆ)** மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை வீதவரிமீதிரூபா 2,246,265 ஆனதுடன், அம் மீதிக்குள் 5 வருட காலத்தை விஞ்சிய ரூபா 1,287,904 ஆன மீதி உள்ளடங்கியுள்ளது.

**2.4.2 குத்தகைவாடகை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை குத்தகை வாடகைமீதிரூபா 1,837,668 ஆனதுடன், 5 வருட காலத்திற்கு முன் இருந்து முன் கொண்டுவரப்பட்ட நிலுவைமீதிரூபா 1,277,307 ஆனது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை கடையறை வாடகைமீதிரூபா 1,817,319 ஆனதுடன், அம் மீதிக்குள் 1-5 இடையிலான வருட காலத்திளிலிருந்து அறவிடவேண்டிமீதி ரூபா 927,955 ஆனது.

**2.4.3 அனுமதிபத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை அனுமதிபத்திரக் கட்டணம் மீதி ரூபா 74,850ஆனதுடன்,அம் மீதிக்குள் 1-5 இடையிலான வருட காலத்திளிலிருந்து அறவிடவேண்டி மீதி ரூபா 60,850 ஆனது.

**2.4.4 ஏனைய வருமானம்**

**(அ) மோட்டார் வண்டி வாடகை வருமானம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 2,410,910 ஆன நிலுவை மீதி இருந்ததுடன், பற்றுச்சீட்டிடல் ரூபா 424,080 ஆனது. இம் மீதிகளின் ஆண்டின் அறவீட்டு விகிதம் 18 சதவீதம் மற்றும் 36 சதவீதம் ஆனது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் ரூபா 1,676,060 நிலுவை நிலவியதுடன், அவற்றில்5 வருட காலத்தை விஞ்சிய ரூபா 418,860 ஆன மீதி ஆனது.

**(ஆ) ஏக்கர் வரி**

**(i)** மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 122,523ஆன நிலுவை மீதி இருந்தபோதிலும், ஆண்டினுள் அவற்றின் ரூபா 41,512 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 33 சதவீதகுறைந்தஅளவானது.

**(ii)** மீளாய்வாண்டு இறுதியில் நிலுவைஏக்கர் வரி மீதி ரூபா 100,000 ஆனதுடன், அம் மீதியினுள் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 50,333 ஆன மீதி உள்ளடங்கியுள்ளது.

**(இ) நீர் கட்டணம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ள ரூபா 1.145,630 ஆன நிலுவை மீதியின் ஆண்டினுள் ரூபா 601,205 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது மொத்த நிலுவையின் 52 சதவீத அளவானது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 இல் நிலுவை நீர்கட்டணம் மீதி ரூபா 1,094,893 ஆனதுடன், அம் மீதியினுள் 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 334,590 ஆன மீதி உள்ளடங்கியுள்ளது.

### 2.4.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதிக்கு நீதிமன்ற தண்டப்பணமாக ரூபா 1,369,132மற்றும் முத்திரை கட்டணமாக ரூபா 6,732,797 ஆன தொகை அறவிட வேண்டியதாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** பிரதேச சபையால் தெல்தெனிய பொது சந்தையின் கடையறை தொகுதியொன்று நிர்மானிப்பதற்கு உத்தேசம் செய்யப்பட்டு 7 வருடம் கடந்திருந்த போதிலும் நிர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**ஆ)** பொருலாதார அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டின் மீது மீரியகொல்ல தாவனே வாவி புனரமைத்தல் 2013 திசெம்பர் 20 ஆம் திகதி மெததும்பர பிரதேச சபைக்கு ஒப்படைத்திருந்தது. இதன் பிரதான நோக்கம் 6 கிராமங்களில் குடியேரியுள்ள 3500 குடுடம்பங்பளுக்கு குடி நீர் விநியோகம் போதிலும், நீர் விநியோகிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபைக்கு சொந்தமான கட்டிடமொன்றில் மேல் மாடியின் கடையறைகள் கீழ் மாடியின் குத்தகைக்காரர்களுக்கே பெறுனர் நடைமுறை கடைபிடிக்கப்படாது ஒரே முறை குத்தகைப் பணம் (key money) அறவிடப்படாமல் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 22,632,425 செலவு மேற்கொள்ளப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த கேட்போர் கூடம் 2016 ஜனவரி 23 திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கூட்டம் நடத்துவதற்கு இயலாதளவு அசுத்தமாக இருந்ததுடன், சில இடங்களில் கூரைத் தகடு உடைந்திருதது. மீளாய்வாண்டில் இக் கேட்போர் கூடத்தை 5 நாற்கள் வாடகைக்கு வழங்கி ரூபா 9,000 ஆன வருமானம் ஈட்டப்பட்டிருந்தது.

(இ) தெல்தெனிய மீன் வியாபார நிலையம் 2013 ஆண்டு முதல் பெறுனர் ஒருவர் முன்வராமையினால் மூடிவைக்கப்பட்டிருந்ததுடன், குறைந்தபட்ச பெறுனர் தொகையுடன் வழங்குகையில் ரூபா 1,083,000 ஆன தொகை சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. கடையறையை பழுதுபார்த்து வேரொரு வியாபாரத்திற்கேனும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொது வியாபார நிலையத்தில் A கட்டிடத்தின் இலக்கம் 8 கொண்ட கடையறையை பெற்றிருந்த குத்தகைகாரருக்கு அதன் உரிமையை ஒப்படைக்க சபை தவரியதன் காரணமாக குத்தகைகாரரினால் ரூபா 800,000 இழப்பீடு கோரி சபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சபை அலுவலர்கள் நீதிமன்றத்தில் சமூகமளிக்காமை மற்றும் விடயங்களை முன்வைக்க நடவடிக்கை எடுக்காமையினால் சபையின் பொறுப்பிலிருந்த இலக்கம் 252-6479 கொண்ட கெப் வண்டி எஸ்கீஸ் கட்டலையினூடாக தடை செய்யப்பட்டிருந்தது.

(உ) மெததும்பர பிரதேச சபையின் ஆளணியின் அங்கீகரிக்கப்பட்ட 7 பதவிகளில் 9 வெற்றிடங்கள் நிலவியன.

### 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சபைக்கு சொந்தமான , இறைச்சி மற்றும் மீன் கடைகளை குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக 2009 ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 வரை ரூபா 1,113,246 ஆன வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொருளாதார மத்திய நிலையத்தின் கடையறைகள் மற்றும் காணி குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக மீளாய்வாண்டில் செப்தம்பர் 30 தினதிற்கு ரூபா 2,359,972 ஆன தொகை அறவிடவேண்டி இருந்த போதிலும், இத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(இ) சந்தை வளவில் உள்ள கடையறைகளை அகற்றி புதிய வியாபார கட்டிடத் தொகுதியொன்றை நிர்மானிக்க உத்தேச்க்கப்பட்டிருந்ததுடன், இங்கு முறையற்ற விதத்தில் 92 குத்தகைக்காரர்கள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 20,301,000 ஆன தொகை பெறப்பட்டு நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2009 இல் இக் கட்டிடம் நிர்மானிக்கப்பட உத்தேச்க்கப்பட்டிருந்த போதும், 2014 திசெம்பர் 31 திகதி வரைலும் நிர்மானினக்கப்படடிருக்கவில்லை.

(ஈ) களஞ்சியத்தில் நிலவிய நீர் உபகரண இருப்பு தொடர்பாக 2016 நவம்பர் 23 திகதி செய்யப்பட்ட மெய்மை ஆய்வின் போது 97 பொருட்களின் மிகை மற்றும் 506 பொருட்களின் குறைவும் நிலவியது.

(உ) 2014 மற்றும் 2015 இரு வருடத்திற்குள் கிடைத்திருந்த அனுமதியற்ற 18 நிர்மானங்கள் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டு நிலவிய ரூபா 160,728 ஆன முற்பண மீதி மற்றும் ரூபா 24,082 ஆன சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான குத்தகை பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பயனற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

(அ) 2 மோட்டார் சைகல் மற்றும் ஜீப் வண்டியொன்றும் எவ்வித பிரயோசனமுமின்றி பயனற்றதாக சபை வளவில் காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபைக்கு சொந்தமான 3 உப அலுவலகங்கள் பல வருடங்களிலிருந்து பயனற்றதாக நிலவியது.

(இ) 2014 மாகாண எழுச்சி அபிவிருத்தி உத்தேசத்தின் கீழ் நிர்மானிக்கப்பட்டிருந்த உடிஸ்பத்துவ சந்தை 2016 ஜனவரி 26 திகதி சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் மாதம் வரையிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது பயனற்றதாக நிலவியது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

குறை அபிவிருத்தி / தனியான கிராமங்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரம்புக்பொத கோட்டவத்தகம பாதை அபிவிருத்திற்காக ரூபா 500,000 ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் பயன்பெறுபவர்கள் 4 ஆனமையால் நிர்மானம் நிருத்தப்பட்டிருந்தது. கருத்திட்டம் சட்டங்கள், விதிகளின் பிரகாரம் தெரிவு செய்யப்படாமையினால் ஒப்பந்தக்காரரால் மேற்கெள்ளப்பட்ட செலவினத்திற்காக ரூபா 75,000 செலுத்தப்பட வேண்டியிருந்தது.

### 3.6 ஒப்பந்தக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** 2016ஆண்டில் மாகாண குறித்த அபிவிருத்தி உதவியின் கீழ் மெதமஹனுவர வாராந்த சந்தையின் அபிவிருத்திற்காக ரூபா 1,000,000 ஒதுக்கீட்டுப்பணம் கிடைத்திருந்தது. இவ் வேலையை நிதி இயழுமையற்ற கலேமெதுர விவசாய சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும், சபையின் தொழினுட்ப அலுவலர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட கட்டிடத்தின் அடித்தலத்திற்காக நியமத்திற்கு மாற்றமாக வழுவற்ற கம்பி பயன்படுத்தப்பட்டமை வெளிபடுத்தப்பட்டதன் பின்னர் வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. நிர்மானம் மேற்கொள்கையில் முறையாக பெறுகை ஒப்படைக்கப்படாமை காரணமாக ஒதுக்கீட்டினை மீள் அனுப்ப வேண்டி ஏற்பட்டிருந்தது.

**(ஆ)** 2016 ஆண்டின் பிரதேச சபை வழுவூட்டும் வேலை திட்டத்தின் கீழ் சபைக்கு சொந்தமான சிறுவர் பூங்காவின் மதில் நிர்மானிப்பதற்காக ரூபா 663,925 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் 200 சீமெந்து பைகள் குறித்த வியாபார நிறுவனத்தினுள்ளும் மெடல் மற்றும் மணல் சிறுவர் பூங்காவினுள்ளும் போடபட்டிருந்தன.

### 3.7 கழிவுப் பொருள் முகாமை

பிரதேச சபை அதிகார எல்லையில் தினத்தோரும் ஒன்று சேரும் 4 மெற்றிக் டொன் அளவான கழிவுப் பொருட்கள் சபையின் டெக்டர் மற்றும் ஊளியர்களை ஈடுபடுத்தி ஒன்று சேர்கப்பட்டிருந்ததுடன் கழிவுப் பொருட்கள் வெவ்வேறாக பெற்றுக்கொள்ளப்படாமல் தெல்தெனிய பொது விளையாட்டரங்கு அருகில் மஹவெலி அதிகாரிசபையிக்கு சொந்தமான காணியொன்றில் போடப்பட்டு மண்ணினால் மூடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பிரதேசத்தில் ஒன்று சேறும் கழவுப்பொருட்கள் மீள்சுழற்சிக்கு உற்படுத்தப்படாமல் சுற்றாடளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இடப்பட்டிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டினுள் வருமானம் மற்றும் செலவின விடயங்கள் இடையில், ஒதுக்கீடு மாற்றியும் பாதீடு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினம் இடையில், போதியளவு விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

(அ) 13 செலவின விடயங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ரூபா 1,408,000 ஆன மொத்த ஒதுக்கீடும் சேமித்திருந்தது.

(ஆ) 12 வருமான விடயங்களுக்காக தேறிய ஒதுக்கீடு மற்றும் உள்ளவாறான செலவு இடையில் 60 சதவீதம் முதல் 98சதவீதம் வரையான விலகல் இருந்தது.

**4.2 பெறுகைகள் திட்டம்**

--------------------------------

மீளாய்வாண்டிற்கான பெறுகைகள்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

--------------------------------------

மீளாய்வாண்டில் சபையின் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று செய்யப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்.
(ஆ) கணக்கீடு.
(இ) வாகன கட்டுப்பாடு.
(ஈ) வருமான நிருவாகம்.
(உ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர்.
(ஊ) ஒப்பந்தக் கட்டுப்பாடு.
(எ) களஞ்சிக் கட்டுப்பாடு.